கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.
அ.வ.எண்.296/2017
நாள். 22.06.2026

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 22.06.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==

பெயர் = திருமதி.சத்தியபாமா மண்ணச்சநல்லூர் குறு வட்ட அளவர்	கணவர் பெயர்= திரு.கண்ணன்
கிராமம் =	தாலுக்கா =
தொழில் =	வயது =

==

DW3 மு.வி

1) நான் தற்போது மண்ணச்சநல்லூர் குறு வட்ட அளவராக பணிபுரிந்து வருகிறேன். மண்ணச்சநல்லூர் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணையின் பேரில், வட்டாட்சியர் எனக்கு அளித்த அதிகார கடிதத்தில் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கு சொத்தான பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2ல் கட்டுப்பட்ட சொத்தை மண்ணச்சநல்லூர் வட்டத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான்.

2) பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2ற்கான வருவாய் துறை கணக்கு பதிவேடுகளை ஆய்வு செய்து அதுபற்றி விவரங்களை வட்டாட்சியரிடம் கேட்டு உறுதி செய்துகொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்து எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் ரயத்து புஞ்சை நிலம், அதற்கான அ.பதிவேட்டின் உண்மை நகலை கொண்டு வந்துள்ளேன்.

3) **பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2 ற்கான அ.பதிவேட்டின் உண்மை நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.சா.ஆ.1 படி பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2 ற்கான விஸ்தீரணம் என்ன என்றால் 14 ஏர்ஸ். மேற்படி புல எண்ணிற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஜெ .பொன்னாயி, கு.நல்லேனான், கு.நாச்சாரம்மாள் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது.

4) மேற்படி புல எண்ணை பொறுத்து வேறு என்ன ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன் என்றால் பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2 ற்கான புல வரைபடம், சிட்டா மற்றும் அடங்கல் பதிவேடு ஆகியவற்றை கொண்டு வந்துள்ளேன். **பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164 ற்கான புல வரைபடத்தின் உண்மை நகல் அ.சா.ஆ.2 ஆகவும், 03.06.2026 தேதியில் வழங்கப்பட்ட பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2A, 2B, 2C, 2D ற்கான சிட்டாவின் உண்மை நகல் (இரண்டு தாள்கள்) அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5) **பூனாம்பாளையம் கிராமம் புல எண்.164/2A, 2B, 2C, 2D ற்கான அடங்கல் கணக்கின் உண்மை நகல் அ.சா.ஆ.4 ஆகவும், 03.06.2026 தேதியில் வழங்கப்பட்ட புல எண். 164/2 ஆனது புல எண்.164/2A, 2B, 2C, 2D ஆக உட்பிரிவு செய்யப்பட்டு நான்கு நபர்கள் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டதற்கான அ.பதிவேட்டில் உள்ள குறிப்பின் உண்மை நகல் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

6) வழக்கு சொத்தான புல எண். 164/2 ஆனது புல எண்.164/2A, 2B, 2C, 2D ஆக உட்பிரிவு செய்யப்பட்டதற்கு வட்டாட்சியரின்

செயல்முறை நடவடிக்கை உத்தரவு உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் மேற்படி செயல்முறை நடவடிக்கை உத்தரவு மற்றும் அதற்கான நாள்:31.12.2013 தேதிய **கோப்பு எண்.8A/158**/1423 கோப்பு ஆவணம் மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலக பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை என்று பதிவு எழுத்தர் கடிதம் கொடுத்துள்ளார்.

7) 08.06.2026 தேதியிட்ட மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலக பதிவறை பதிவு எழுத்தரின் கடிதம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களது அலுவலகத்தில் வட்டாட்சியர் பிறப்பிக்கும் செயல்முறை உத்தரவிற்கு ஒவ்வொரு வருடத்திற்கான கோப்பாக பராமரிக்கப்படுமா என்றால் பராமரிக்கப்படும். மேற்படி கோப்பு கிடைக்க வாய்ப்புள்ளதா என்றால் மேற்படி விவரம் பதிவு எழுத்தருக்கு தான் தெரியும். பதிவு எழுத்தரிடம் இது குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்காகதான் அவர் அ.சா.ஆ.6 கடிதத்தை கொடுத்துள்ளார்.

8) எங்களது அலுவலக கோப்பு காணாமல் போனது குறித்து எங்களது உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரம் குறித்து தாசில்தாருக்கு தான் தெரியும் என்றாலும், தாசில்தார் அதனை தெரியப்படுத்தியுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இது குறித்து நான் வட்டாட்சியரிடம் கேட்டேனா என்றால் 2013 ல் எங்களது அலுவலகம் வேறு இடத்திலிருந்து தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டதால் விடுப்பட்டிருக்கலாம்.

9) மேற்படி விவரம் அ.சா.ஆ.6 கடிதத்தில் கண்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி செயல்முறை உத்தரவு எவ்வாறு காணாமல் போனது என்று வட்டாட்சியரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரியல்ல,

பதிஎழுத்தருக்கு தான் தெரியும். இதற்காக பதிவு எழுத்தர் மீது வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்தாரா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர புல எண்.164/2 பொறுத்து வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

10) மேற்படி புல எண் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான வட்டாட்சியரின் செயல்முறை உத்தரவு கோப்பில், மேற்படி உட்பிரிவிற்காக யார் மனு கொடுத்தது யார் யார் விசாரிக்கப்பட்டுள்ளனர், அவர்களது வாக்குமூலங்கள் குறித்த விவரங்கள், சமர்பிக்கப்பட்ட பத்திர ஆவணங்கள், நில அளவையரின் அறிக்கையும் இருக்கும் என்றால் சரிதான். வருவாய் துறை ஆணைவிதிகள், பட்டா பாஸ்புத்தக நடைமுறை விதிகளின் படி ஒரு நபருக்கு கூட்டுப்பட்டாவில் உள்ள சொத்தினை உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்குவதற்கான நடைமுறைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

11) நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.1 அ.பதிவேட்டில் புல எண்.164/2 ல் உள்ள 14 ஏர்ஸில் மேற்படி 3 நபர்களுக்கு தனித்தனியாக எவ்வளவு விஸ்தீரணம் உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உட்பிரிவிற்கு முன்பு தனித்தனியாக எவ்வளவு விஸ்தீரணம் உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்காது. பி.சா.ஆ.3 லும் மேற்படி தனித்தனி விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மொத்தமாகவே காட்டப்பட்டுள்ளது.

12) அ.சா.ஆ.1 அ.பதிவேட்டில் புல எண்.164/2 ல் உள்ள 14 ஏர்ஸில் மேற்படி 3 நபர்களுக்கு சரிசம பாகம் உள்ளது என்றால் கூட்டுப் பட்டாதாரர்களுக்கு சரிசம பாகம் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

அப்படியானால் கூட்டுப்பட்டாதாரர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பாகம் உள்ளது என்று எங்களது வருவாய் துறையின் ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை.

13) அ.சா.ஆ.1 அ.பதிவேடு ஆவணம் பூர்வீக வாரிசுரிமை கூட்டுப்பட்டாவாக எப்போது தயாரிக்கப்பட்டது என்றால் 1979–1986 ஆகும். அ.சா.ஆ.1 அ.பதிவேட்டின் அடிப்படையில் தான், அதில் கண்ட 3 கூட்டுப்பட்டாதாரர்களுக்கு மேற்படி சொத்தில் உரிமை ஏற்படுகிறது என்றால் சரிதான். மேற்படி 3 கூட்டுப்பட்டாதாரர்களில் யாராவது உட்பிரிவு மற்றும் தனிப்பட்டாவோ வேண்டியோ அல்லது மேற்படி 3 கூட்டுப்பட்டாதாரர்களில் ஒருவரிடம் இருந்து கிரையம் பெற்ற நபரோ உட்பிரிவு மற்றும் தனிப்பட்டாவிற்காக விண்ணப்பம் கொடுத்திருந்தால், அவர்களுக்குரிய பாக விகிதம் குறித்து ஆதாரமாக கிரைய ஆவணங்கள், வருவாய் துறை கணக்கு உரிமை மூல ஆவணங்கள், வில்லங்க சான்றிதழ்கள், இதர கூட்டுப்பட்டாதாரர்களின் ஆட்சேபனை கடிதங்கள் ஆகிய ஆவணங்களை பெற்று அதன் அடிப்படையில் விசாரணை நடத்தி உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான், அத்துடன் கூட்டுப்பட்டாதாரர்களின் அனுபவத்தையும் அடிப்படையாக கொண்டு உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டா வழங்கப்படும்.

14) மேற்படி ஆவணங்கள் அனைத்தும் அதற்கான கோப்பில் இருக்கும் என்றால் பத்திரங்களும், அனுபவத்திற்கான ஆவணங்களும் மட்டும் கோப்புகளில் இருக்கும். வருவாய்துறை கணக்குகள், கிரைய ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுப்பட்டாதாரர்களின் பாக சொத்தினை பொறுத்து நில அளவையர் மூலம் சொத்தினை உட்பிரிவு

செய்யும் பொழுது, இதர இதர கூட்டுப்பட்டாதாரர்களிடம் இருந்து பாக விகிதம் குறித்து ஆட்சேபனைகள் செய்தால் உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டா வழங்க மாட்டோம் என்றால் சரிதான், கிரைய ஆவணங்கள் மற்றும் அனுபவம் ஆகியவற்றில் அடிப்படையில் நில அளவை செய்த பிறகே உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டா வழங்குவோம். அவ்வாறு உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கும் போது கூட்டுப்பட்டாதாரர்களில் பாக அளவு குறித்து அறிய அவர்களிடம் என்ன ஆவணம் கேட்போம் என்றால் முதலில் பாக பிரிவினை ஆவணம் உள்ளதா என்று கேட்போம், இல்லையெனில் கூட்டுப்பட்டாதாரர்களுக்கு ஆட்சேபனை உள்ளதா அல்லது இதர கூட்டுப்பட்டாதாரர்களுக்கு அனுபவம் உள்ளதா என்று கேட்போம்.

15) தனிப்பட்டா வழங்க இதர கூட்டுப்பட்டாதாரர்களுக்கு ஆட்சேபனை உள்ளதா என்று நேரில் அவர்களை அழைத்தோ, நேரில் சென்றோ விசாரிக்க வேண்டும் என்பதே சட்டப்படியான நடைமுறை என்றாலும், இவ்வழக்கில் நாங்கள் மேற்படி நடைமுறைகளை பின்பற்றி உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றாலும், அது தொடர்பான வாக்குமூல ஆவணங்கள் உள்ளதா என்றாலும் 2013 ல் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி விவரங்கள் அந்த காலக்கட்டத்தில் இருந்த நில அளவையருக்கு தான் தெரியும்.

16) மேற்படி சட்டநடைமுறைகள் பின்பற்றிப்பட்டுள்ளதா என்று வட்டாட்சியரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் சட்டநடைமுறைகள் பின்பற்றிப்பட்டே வழங்கப்பட்டிருக்கும், ஆனால் அது குறித்து வட்டாட்சியரிடம் நான் கேட்கவில்லை. இவ்வழக்கில்

உட்பிரிவின் போது இதர கூட்டுப்பட்டாதாரர்களுக்கு சட்டபடி அறிவிப்பு அனுப்பட்டதா என்றால் தெரியாது. அவர்களிடமிருந்து ஆட்சேபனை பெறப்பட்டதா என்றால் தெரியாது.

17) இவ்வழக்கில் மனுதாரரான வாதியின் பாக அளவு அனுபவம் குறித்தோ, வாய்மொழி பாக பிரிவினை நடத்தப்பட்டதா என்பது குறித்தோ, இதர கூட்டுப்பட்டாதாரர்களிடமோ, இதர சாட்சியங்களிடமோ அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்யப்பட்டதா, சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்றால் ஸ்தல விசாரணையில் மேற்படி விவரங்கள் குறித்து விசாரணை செய்யப்பட்டிருக்கும். அவ்வாறு ஸ்தல விசாரணை அறிக்கை மேற்படி வட்டாட்சியர் செயல்முறை உத்தரவு கோப்பில் இருக்கும் என்றால் அறிக்கையாக இருக்காது, வாக்குமூலங்களாக இருக்கும், தேவைப்பட்டால் அறிக்கை இருக்கும்.

18) ஸ்தல விசாரணை என்ன என்றால் நில அளவையர் இடத்திற்கு சென்று மனுதாரரிடமும், இதர கூட்டுப்பட்டாதாரர்களிடமும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்வார். மேற்படி விசாரணை அறிக்கையை வருவாய் வட்டாட்சியர் சமர்ப்பிப்பார் என்றால் சரிதான். கூட்டுப்பட்டாதாரர்களின் வருவாய் ஆவணங்களையும், உரிமைமூல ஆவணங்களையும் மறைத்து, அவர்களுடைய பாகத்தினையும், வாதியின் பாகமாக காண்பித்து தனிபட்டாவிற்கு விண்ணப்பித்து, அதன்படி பட்டா வழங்கப்பட்டால் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான்.

19) எங்களது அலுவலகத்திலிருந்து மேற்படி சொத்திற்கான 08.06.2026 தேதிய வில்லங்க சான்றிதழின் இணையதள நகலை கொண்டு வந்துள்ளேன். **08.06.2026 தேதிய பூனாம்பாளையம் கிராமம்,**

புல எண்.164/2 ற்கான 01.06.1980 முதல் 14.04.1999 வரையிலான ஸ்ரீரங்க சார்பதிவக அலுவலகம், 15.04.1999 முதல் 01.06.2026 வரையிலான மண்ணச்சநல்லூர் சார்பதிவக அலுவலக வில்லங்க சான்றிதழின் இணையதள பதிவிறக்க நகல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (சார்பதிவாளரின் பார் கோடு இல்லை என்று 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

20) அ.சா.ஆ.7 நான்கு நாட்களுக்கு முன்பு 08.06.2026 ல் பதிவிறக்கம் செய்யப்பட்டதற்கு காரணம் என்ன என்றால் மேற்படி செயல்முறை உத்தரவு கோப்பு கிடைக்கப்பெறாததால், எந்த ஆவணத்தின் அடிப்படையில், எப்படி உட்பிரிவு செய்யப்பட்டதை அறிய பதிவிறக்கம் செய்யப்பட்டது.

21) அ.சா.ஆ.7 ஆவணம் குறித்த விவரம் வட்டாட்சியருக்கு தெரியுமா என்றால் தெரியும். 1930 லிருந்து 1980 வரையிலான ஆண்டுகளில் எதேனும் ஆவணம் வழக்கு சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று நான் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. அ.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் பத்திர ஆவண பதிவும், 1930 லிருந்து 1980 வரையிலான ஆண்டுகளுக்குரிய வில்லங்க பதிவிலும் 1ம் பிரதிவாதியின் தாத்தாவின் பத்திர ஆவண பதிவு உள்ளது என்றால் 1930 லிருந்து 1980 வரையிலான பதிவை நான் பார்க்கவில்லை, அதனால் அதுபற்றி தெரியாது.

22) சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் ஒருவர், இதர கூட்டுபட்டாதாரர்களின் பாகத்தினையும், அவரது பாகமாக காண்பித்து சட்டத்திற்கு எதிராக தனிப்பட்டா உட்பிரிவு செய்யப்பட்டால் அது

செல்லாது என்றால் சரிதான். கிராம கணக்குகளில் கண்ட கூட்டுபட்டாதாரர்களுக்கு அவரது குடும்ப வழியில் சம பாக உரிமை சட்டப்படி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரம் வட்டாட்சியருக்கு தான் தெரியும் என்றால் கூட்டுப்பட்டாதாரர்களுக்கு மட்டுமே தெரியும்.

23) தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகம் சட்டம் மற்றும் வருவாய்துறை ஆணை விதிப்படி கூட்டுப்பட்டாதாரர்களுக்கு கணக்கில் கண்டுள்ள சொத்தானது குடும்ப வழியில் சரிசமமாக கணக்கிட வேண்டும் என்றும், அவ்வாறு கணக்கிட்டால் 1ம் பிரதிவாதியின் தாயார் பொன்னாயி அம்மாளுக்கு 1 பாகமும் மற்றொரு குடும்பத்தின் வழி பாகத்தை சேர்ந்தவரான கிருஷ்ணமூர்த்தி என்பவரின் இரு மனைவிகளான நல்லேனாள், நாச்சாரம்மாள் ஆகியோருக்கு எஞ்சிய ஒரு பாகமும் ஆக இரண்டு சரிசம பாகம் அ பதிவேட்டின் படி இருந்து வருகிறது என்றாலும், வாதி மேற்படி கிருஷ்ணமூர்த்தியின் மனைவிகளில் ஒருவரான நாச்சாரம்மாளிடமிருந்து கிரையம் பெறும் போது, அவரது பாகத்தை மட்டும் கிரையம் பெறாமல் நல்லேனாள் பாகத்தையும் சேர்த்தும், மேலும் 1ம் பிரதிவாதியின் தாயார் பொன்னாயி அம்மாள் பாகத்தையும் சேர்த்து மோசடியான முறையில் கிரையம் பெற்றுக் கொண்டும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் பொதுவில் பிரிப்படாத சொத்தினை சரியான முறையில் விசாரணை மேற்கொள்ளாமல், தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக நடைமுறையை பின்பற்றாமல், உட்பிரிவு செய்து வாதிக்கு தனிப்பட்டா வழங்கியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

24) தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக நடைமுறையை பின்பற்றாமல், தனிப்பட்டா வழங்கியுள்ளதால் தான், வருவாய் வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கை கோப்பை தாக்கல் செய்யாமல் தொலைந்து விட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கோப்பு யாருடைய காலத்தில் எந்த ஆண்டில் காணாமல் போனது என்றால் தெரியாது.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.